சுருக்கம்

தொழில் துறை – 2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் – அரியலூர் சிமெண்ட் ஆலையில் 2.50 கோடி ரூபாய் செலவில் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு உடைய ஒரு புதிய மூடும் வசதி கொண்ட நிலக்கரி கிடங்கு (Closed Coal shed) அமைக்கப்படும் – அனுமதி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2) துறை**

அரசு ஆணை (டி) எண்.38

நாள் : 25.04.2022
சுபகிருது – சித்திரை – 12
திருவள்ளுவர் ஆண்டு 2053

ஆணை:

2022–2023ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

"அரியலூர் சிமெண்ட் ஆலையில் கிளிங்கர் உற்பத்தி செய்வதற்கு மாதமொன்றுக்கு தேவைப்படும் 16,000 மெட்ரிக் டன் நிலக்கரி பாதுகாப்பாக இருப்பில் வைக்க வேண்டியுள்ளது. தற்போது 5,000 மெட்ரிக் டன் நிலக்கரியை சேமித்து வைக்கும் மூடிய கிடங்கு ஒன்று உள்ளது. மழை போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து மீதமுள்ள நிலக்கரியை பாதுகாப்பதுடன், மேலும் தேவையான நிலக்கரியை பாதுகாத்து வைக்க ஏதுவாக, அரியலூர் சிமெண்ட் ஆலையில் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு புதிய மூடும் வசதி கொண்ட நிலக்கரி கிடங்கு 2.50 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்படும்".

2. மேற்காணும் திட்டத்தினை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு, நடைமுறைகளில் உள்ள விதிகளைப் பின்பற்றி, குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பணிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்,
5–வது தளம், ஆவின் இல்லம்,
எண்.3A, பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை, நந்தனம், சென்னை– 600 035.
நகல்
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009,
தொழில் (அ.ந.மு2/வ.செ.தி.1) துறை, சென்னை – 600 009.
இ.கோ/உ.நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/4/2022
பிரிவு அலுவலர்
25.4.2022